**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி:26.01.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 77–வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் 2026 ஜனவரி 26–ஆம் தேதி 77–வது குடியரசு தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மதிப்பிற்குரிய துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் க. சுப்பிரமணியன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின உரையை நிகழ்த்தினார். இந்திய ஜனநாயகத்தின் தோற்றம் குறித்து டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் பங்களிப்பையும், விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்களையும் அவர் நினைவுகூர்ந்தார்.

2026 ஜனவரி 26–ஆம் தேதி கொண்டாடப்பட்ட 77–வது குடியரசு தினத்தின் கருப்பொருள் "வந்தே மாதரம் – 150 ஆண்டுகள்" என்பதையும், "ஆத்மநிர்பர் பாரத் (சுயநிறைவு இந்தியா)" என்ற நோக்கத்தையும் அவர் வலியுறுத்தினார். 'சீர்திருத்தம், செயல்படுத்துதல், மாற்றம்'என்ற கொள்கைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு இந்தியரும் வலிமைமிக்க, புதுமையான மற்றும் வளமான இந்தியாவை உருவாக்க பங்களிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை அடைவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முக்கிய பங்காற்றியுள்ளது. இதுவரை 948 பயிர் வகைகள், 1500 தொழில்நுட்பங்கள் மற்றும் 171 வேளாண் இயந்திரங்களை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், 7 வேளாண் பயிர்கள் மற்றும் 11 தோட்டக்கலைப் பயிர்கள் உட்பட 19 புதிய பயிர் வகைகள் வெளியிடப்பட்டு, முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறன் உயர்வுக்கு வழிவகுத்துள்ளது.

கிராம அளவிலான நடுத்தர கால வானிலை முன்னறிவிப்பு, வேளாண்மையில் தொலைஉணர்வு பயன்பாடுகள், இயற்கை வேளாண்மை, மண் மற்றும் நீர் பாதுகாப்பு,

நானோ உரங்கள், நீரில் கரையும் உரங்கள், உயிர் உரங்கள் போன்ற புதிய தலைமுறை உரங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தோட்டக்கலையில் உயர் அடர்த்தி நடவு, விதான மேலாண்மை,ஒட்டுக்கட்டுதல் தொழில்நுட்பம், உயர் தொழில்நுட்பவியல், மற்றும் மூலக்கூறு நோயறிதல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது.

இன்றைய தலைமுறையினர் புத்தக வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை துணைவேந்தர் (பொறுப்பு) அவர்கள் வலியுறுத்தினார். அறிவாற்றல் மற்றும் புரட்சிகர சிந்தனைகளுக்கான வலிமையான ஆதாரமாக புத்தகங்கள் விளங்குகின்றன என அவர் குறிப்பிட்டார். தனது தூக்குத் தண்டனைக்கு முன், விளாதிமிர் லெனின் எழுத்துக்களை முடிக்க நேரம் கேட்ட பகத் சிங்கின் இறுதி தருணங்களை நினைவுகூர்ந்த அவர், "ஒரு புரட்சியாளர் இன்னொரு புரட்சியாளருடன் பேசுகிறார்" என்ற அவரது வார்த்தைகளை சுட்டிக்காட்டினார். வாசிப்பு சிந்தனை, துணிச்சல் மற்றும் மாற்றத்தை உருவாக்கும் சக்தி கொண்டது என்பதை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது என அவர் கூறி, மாணவர்கள் புத்தகங்களை வாழ்நாள் தோழர்களாக ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

2047 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை இந்தியாவின் முதன்மை மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகமாகவும், இந்தியாவை ஒரு மேம்பட்ட நாடாகவும் உருவாக்க உறுதிமொழி எடுக்க மாணவர்கள் மற்றும் பணியாளர்களை அவர் கேட்டுக்கொண்டார். பாரம்பரியத்தின் மீது பெருமை கொண்டு, கடமைகளை நிறைவேற்றி, ஒற்றுமைக்காக சேவை செய்ய வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

இந்த விழாவில் பல்கலைக்கழக அலுவலர்கள், துறைத்தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், என்.சி.சி. மாணவர்கள், என்.எஸ்.எஸ். தன்னார்வலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாணவர் நல மையம் முதன்மையர் முனைவர். ஜெ. ராமலிங்கம் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*